**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, ERANIEL**

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure, 1973/Chapter XXV of BNSS 2023, and Rule 42 and Judicial Form No. 53 of Criminal Rules of practice 2019 )

**C.C.No. 319/2023 P.W. 3/L.W.4**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : | திரு. சாலோமன் | **Calling** | : | |
| **Father's Name** | : | த/பெ. | **Age** | : | |
| **Village** | : | | | | |
| **Taluk** | : | | | | |

**Solemnly affirmed in accordance with the provisions of Section 4 of Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the day 06.05.2025.**

**அரசுத்தரப்பு முதல் விசாரணை :**

**குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் ஆஜர். குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் ஆஜர்**

1. நான் மேற்கண்ட முகவரியில் வசித்து வியாபாரம் செய்து வருகிறேன். குற்றம் சுமத்தப்பட்ட நபர்களை எனக்குத் தெரியும். அ.சா1 என்னுடைய மகன். எனது மகனுக்கு அரசிடமிருந்து அனுமதி வாங்கி ஐஸ் பிளாண்ட் அமைப்பதற்கான வேலைகள் நெல்லிவிளையில் சர்வே எண் 512/13 ல் நடந்துக்கொண்டிருந்தது. அந்த நேரத்திலிருந்தே நாடான்கண் மகன் ஜோயஸ் பெலிக்ஸ், செல்வராஜ் மகன் ஆன்றோ லிபின், யாக்கோபு மகன் ஜாண் யாக்கோபு ஆகியோர்கள் எங்களை மிரட்டி ரூபாய் 5 இலட்சம் கேட்டார்கள்.

2. எனது மகன் பணம் எதுவும் குற்றம் சுமத்தப்பட்ட நபர்களுக்கு கொடுக்கவில்லை. குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் அனுமதியில்லாமல் ஐஸ் பிளாண்டை நடத்தி வருவதாக பொதுமக்களிடம் பொய் பிரச்சாரம் செய்தார்கள். அரசியல் கட்சிகளை தூண்டிவிட்டு போராட்டங்கள் நடத்தினார்கள். அப்போதிலிருந்தே என் மகனுக்கும் குற்றம் சுமத்தப்பட்ட நபர்களுக்கும் பகை இருந்துக்கொண்டே இருந்தது.

3. 01.08.2023 ம் தேதி காலை 09.00 மணியளவில் இ.பி. அலுவலகத்திலிருந்து அங்குள்ள பணியாளர்களும், எங்களுடைய பணியாட்களும் ஐஸ் பிளாண்ட் கம்பெனி அருகே டிரான்ஸ்பார்மர்

அமைப்பதற்கான பணிகளை செய்துக்கொண்டிருந்தார்கள். அப்போது குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் மூவரும் 2 இருசக்கர வாகனத்தில் வந்தார்கள். ஒருவர் கையில் வெட்டுக்கத்தி, மற்ற 2 பேர்கள் கையில் 2 அடி நீளமுள்ள கம்பி ஆகியவை இருந்தது. அவர்கள் எனது மகனை மிரட்டினார்கள். எனது மகனை தள்ளையஓழி, புண்டாமவனே என்று தகாத வார்த்தையால் பேசினார்கள்.

4. எனது மகன் சத்தம் போட்டுக்கொண்டு கம்பெனிக்குள் ஓடினார். அப்போது அங்கு வேலைப்பார்த்துக்கொண்டிருந்த பொன்னுமணி மகன் டேவிட்ராஜ், ஜெக்கீஸ் ஆகியோர்கள் வெளியில் வந்தவுடன் குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் இந்த ஒரு முறை நீ தப்பித்துவிட்டாய், ஆனால் என்ன செய்தாவது, உன்னை கொன்றாவது கம்பெனியை நடத்தவிடமாட்டோம் என்று மிரட்டிவிட்டு அங்கிருந்து ஓடினார்கள். சம்பவம் சம்மந்தமாக எனது மகன் புகார் கொடுத்தான். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>குறுக்கு விசாரணை</u>** :

1. பொன்னுமணி என் சித்தப்பா. பொன்னுமணியின் மகன் தான் டேவிட்ராஜ் என்றால் சரிதான். யபேஸ் எனது தம்பி. இ. பி யிலிருந்து எத்தனை பேர்கள் வந்தார்கள் என்றால் சரியாக நோட் பண்ணவில்லை, 2, 3 பேர்கள் வந்திருப்பார்கள். டிரான்ஸ்பார்மர் வேலை நடந்ததாக சொல்லப்படுவது காம்பவுண்டிற்கு வெளியில் உள்ள எங்களது நிலம். ரோடு அதற்கு பின்னர் டிரான்ஸ்பார்மர், அதற்கு பின்னர் காம்பவுண்ட், அதற்கு பின்னர் கேட், அதற்கு பின்னால் ஐஸ் பிளாண்ட் உள்ளது என்றால் சரிதான்.

2. காம்பவுண்ட் சுவர் 8 அடி உயரம் இருக்கும். கேட்டும் 8 அடி உயரம் இருக்கும். அன்றையதினம் டிரான்ஸ்பார்மர் வேலை நடந்தது. மேற்படி ஐஸ் பிளாண்ட் சம்மந்தமாக எம்.எல்.ஏ தலைமையில் பேராட்டம் நடந்தது என்றால் சரிதான். அது சம்மந்தமாக கருங்கல் காவல்நிலையைத்தில் குற்ற எண் 152/2023 என்ற வழக்கு பதிவுச் செய்யப்பட்டதா என்றால் ஆம். எங்களுடைய ஐஸ் பிளாண்ட் அனுமதி பெறாமல் நடைபெற்று வந்தது என்றால் இல்லை. அதன் அடிப்படையில் கிள்ளியூர் பேரூராட்சியில் மன்ற தீர்மானம் ஏற்றப்பட்டது என்றால் இல்லை.

3. அது சம்மந்தமாக ஐஸ் பிளாண்டை நடத்தக்கூடாது என்று குறிப்பாணை கொடுக்கப்பட்டதா என்றால் நேரடியாக கொடுக்கப்படவில்லை. மேற்படி ஐஸ் பிளாண்ட்ற்கு எதிராக பொதுநல வழக்கு மாண்புமிகு சென்னைஉயர்நீதிமன்ற மதுரை கிளையில் தாக்கல் செய்யப்பட்டதா என்றால் - ஆம். மேற்படி நீதிமன்ற உத்தரவில் ஐஸ் பிளாண்ட் நடத்தக்கூடாது என்று உத்தரவு வந்ததா என்றால் இல்லை.

4. எனது மகன் மதுரை உயர்நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்து அதிலும் பேரூராட்சி தான் தீர்மானம்செய்யவேண்டுமென்று உத்தரவு பிறப்பிக்கப்பட்டதா என்றால் ஆம். சாட்சி கேட்கும் கேள்விகளுக்கு முறையாக பதில் சொல்லாமல் கற்றறிந்த வழக்கறிஞரை எதிர் கேள்வி கேட்டுக்கொண்டிருக்கிறார். மேற்படி ஐஸ் பிளாண்ட் விதிமுறைகளை மீறி செயல்பட்டு வருவதால் குழித்துறை நீதிமன்றத்தில் பொதுமக்கள் சார்பில் அசல் வழக்கு எண் 74/2024 ஆக நிலுவையில் உள்ளது என்றால் சரிதான். அந்த வழக்கில் நீதிமன்ற ஆணையர் அறிக்கை தாக்கல் செய்யப்பட்டது என்றால் எனக்கு தெரிந்து இல்லை. ஆணையர் பார்வையிட்டார்.

5. ஊர்மக்கள் சார்பில் ஏராளமான புகார்கள், போஸ்டர்கள் அனுப்பப்பட்டது என்றால் நான் பார்க்கவில்லை. நான் உண்மைக்கு மாறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும், எல்லா விஷயங்களும் எனக்கு தெரியும் என்றால் சரியல்ல. நான் உண்மையை தான் சொல்கிறேன். ஆன்றோ லிபின் வீடு ஐஸ் பிளாண்ட்ன் கிழக்கு பக்கம் உள்ளது என்றால் சரிதான். ஐஸ் பிளாண்ட்டின் மேற்கு பக்கமும் உள்ளது என்றால் சரிதான். மேற்படி சர்வே எண் நிலம் பூஞ்சை நிலம் என்றால் எனக்கு தெரியாது. அனுமதி வாங்கி தான் செய்தோம்.

6. அது விவசாய நிலம் என்பதால் அதில் தொழிற்சாலை சம்மந்தமான எந்த விஷயங்களும் பண்ணக்கூடாது என்றால் அரசு தான் சொல்லவேண்டும். நாங்கள் விதிமுறைகளை மீறி செயல்பட்டதால் தான் வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. காசு கேட்டார்கள். கொடுக்கவில்லை, அதனால் தான் வழக்குப் போட்டார்கள். காசு கேட்டதாக சொன்னதைப் பொறுத்து நான் எங்கேனும் புகார் கொடுத்துள்ளேனா என்றால் கொடுத்துள்ளேன்.

7. மேற்படி சங்கதியை நான் வழக்கிற்காக உண்மைக்கு மாறாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. இந்த வழக்கிற்கும் குற்றம் சுமத்தப்பட்ட நபர்களுக்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல. நான் சொல்வது போல் எந்த சம்பவமும் நடைபெறவில்லை என்றால் சரியல்ல. ஊர்மக்கள் சேர்ந்து வழக்கு போட்டதால் அவர்களை அமைதிப்படுத்துவதற்காக இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டது என்றால் சரியல்ல.

குறுக்கு விசாரணை -முடிக்கப்பட்டது.

சாட்சி சொல்லி என்னால் எடுத்துச் சொல்லப்பட்டு, தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் முன்னிலையில் மேற்படி சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரியானதென்று ஏற்கப்பட்டது.

நீதித்துறை நடுவர்,
இரணியல்.